**This question paper consists of 29 questions and 10 printed pages + map.**
**இந்த வினாத்தாளில் 29 வினாக்களும், 10 அச்சிடப்பட்ட பக்கங்களும் உள்ளன + வரைபடம்.**

**Roll No.**
**பதிவெண் :** | | | | | | | | | | | | |

**Code No. 62/S/N/TM**
**குறியீடு எண் :**
**SET No.- A**

# SOCIAL SCIENCE
# (சமூக அறிவியல்)
# (213-TM)

**Day and Date of Examination**
**(தேர்வு நாள்) :** ______________________

**Signature of Invigilators** 1. ______________________
**(தேர்வு மேற்பார்வையாளர்களின் கையொப்பங்கள்) :** 2. ______________________

**General Instructions :**

**1** Candidate must write his/her Roll Number on the first page of the Question Paper.

**2** Please check the Question Paper to verify that the total pages and the total number of questions contained in the Question Paper are the same as those printed on the top of the first page. Also check to see that the questions are in sequential order.

**3** For the objective type of questions, you have to choose any **one** of the four alternatives given in the question i.e. (A), (B), (C) or (D) and indicate your correct answer in the Answer-Book given to you.

**4** All the questions including objective type questions are to be answered within the allotted time and no separate time limit is fixed for answering objective type questions.

**5** Making any identification mark in the Answer-Book or writing Roll Number anywhere other than the specified places will lead to disqualification of the candidate.

**6** Write your Question Paper code No. **62/S/N/TM-A** on the Answer-Book.

**7** The Question Paper is bilingual. In case of doubt, the English version should be considered as authentic.

**பொதுவான அறிவுரைகள் :**

1 தேர்வர் தனது வினாத்தாளின் முதற்பக்கத்தில் தனது பதிவெண்ணை எழுதிட வேண்டும்.

2 முதற்பக்கத்தின் மேற்பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்த பக்கங்கள், வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை வினாத்தாளில் உள்ளனவா என்பதை தயவு செய்து சரிபார்த்துக் கொள்க.

3 பலவுள் தெரிவு (objective type) வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (A), (B), (C) மற்றும் (D) ஆகிய நான்கு மாற்று விடைகளில் உங்களுடைய விடையைக் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.

4 பலவுள் தெரிவு வினாக்கள் உள்ளிட்ட அனைத்து வினாக்களுக்கும் அனுமதிக்கப்பட்ட காலவரம்புக்குள் விடையளித்திட வேண்டும். பலவுள் தெரிவு வினாக்களுக்கென தனியாக கூடுதல் நேரம் அனுமதிக்கப்படவில்லை.

5 விடைப்புத்தகத்தில் பதிவெண்ணுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் பதிவெண்ணைக் குறிப்பதோ, வேறு அடையாளக் குறிகளிடுவதோ கூடாது. அவ்வாறு செய்தால் உங்கள் தேர்வு செல்லத்தக்கதாகாது.

6 உங்களது வினாத்தாளின் பதிவு எண் **62/S/N/TM-A** ஐ விடைத்தாளில் எழுதவும்.

7 ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால் ஆங்கிலத்தில் கொடுத்துள்ளதை சரிபார்த்து விடையளிக்கவும்.

# SOCIAL SCIENCE

# (சமூக அறிவியல்)

# (213-TM)

Time : **3** Hours] [Maximum Marks : **100**

**நேரம் : 3 மணி]** **[மொத்த மதிப்பெண்கள் : 100**

---

**Note :** (1) **All** questions are **compulsory** and carry marks as indicated against each question.

(2) For Multiple Choice Questions **four** options are given. You have to choose right option and indicate it in your answer book.

(3) Attach the map with answer script.

**குறிப்பு :** (1) அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவுக்கு எதிரிலேயே அதற்குரிய மதிப்பெண் குறிப்பிடப்பட்டுள்ளது.

(2) பலவுள் தெரிவு வினாக்களுக்கு நான்கு மாற்று விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதனை உங்களது விடைத்தாளில் எழுதவும்.

(3) விடைத்தாளுடன் வரைபடத்தையும் இணைத்திடுக.

---

1 Which one of the following Vedas was the first to be composed ? 1

(A) Atharva Veda (B) Sam Veda

(C) Rig Veda (D) Yajur Veda

பின் வருவனவற்றுள் முதலாவதாகத் தொகுக்கப் பட்ட வேதநூல் எது?

(A) அதர்வ வேதம் (B) சாமவேதம்

(C) ரிக் வேதம் (D) யஜுர் வேதம்

2 Which one of the following statements denotes the term "Sovereignty" ? 1

(A) Equal treatment without discrimination.

(B) The Head of the State is an elected person.

(C) The Spirit of common brotherhood.

(D) Complete political freedom and supreme authority.

பின்வரும் கூற்றுகளில் இறையாண்மையைக் குறிக்கும் தொடர் எது?

(A) பாகுபாடில்லாத சமத்துவம்

(B) நாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்

(C) சகோதரத்துவ உணர்வு

(D) முழுமையான அரசியல் சுதந்திரமும் உயர்ந்த அதிகாரமும்

3 Which one of the following is related to the natural component of environment ? 1

(A) Agricultural fields (B) Parks

(C) Roads (D) Atmosphere

பின் வருவனவற்றுள் சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய இயற்கையான பகுதி எது?

(A) வேளாண் வயல்கள் (B) பூங்காக்கள்

(C) சாலைகள் (D) வளிமண்டலம்

4 Identify from the following a 'Biotic' component of envirnoment. **1**

(A) Climate (B) Plants

(C) Soil (D) Water

பின் வருவனவற்றுள் சுற்றுச் சூழலின் உயிரியல் பகுதி எதுவென அடையாளம் காண்க.

(A) தட்பவெப்பநிலை (B) தாவரங்கள்

(C) மண் (D) நீர்

5 Explain any **two** teachings that are included in the four 'Noble Truths' of Gautam Buddha. **1×2=2**

கௌதம புத்தரின் 'உன்னத உண்மைகள்' நான்கில் அடங்கியுள்ள எவையேனும் இரண்டு போதனைகளை விளக்குக.

6 How does the ecosystem get influenced by human beings ? Explain with an example. **2**

மனிதர்களால் சுற்றுச் சூழல் முறை எவ்வாறு பாதிக்கப்படுகிறது? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

7 Explain the two provisions that have been guaranteed by the right against exploitation through the Constitution to the citizens. **1×2=2**

அரசமைப்புச் சட்டத்தில், சுரண்டலுக்கு எதிராகக் குடிமக்களுக்கு உறுதியாக வழங்கப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளை விளக்குக.

8 Why is poverty considered as the greatest bane of democracy ? Explain. **2**

ஏழ்மை, மக்களாட்சி முறையின் மிகப்பெரிய சாபக்கேடாக ஏன் கருதப்படுகிறது? விளக்குக.

9 Describe the various changes that were made in the Feudal economy after the $10^{th}$ century in Europe. **1×4=4**

ஐரோப்பாவில் 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் நிலவுடைமைப் பொருளாதாரத்தில் செய்யப்பட்ட பல்வேறு மாற்றங்களை விவரிக்க

10 Describe the main features of the French Revolution. **1×4=4**

பிரெஞ்சு புரட்சியின் முக்கியமான இயல்புகளை விவரிக்க

11 Describe the positive impact of the Industrial Revolution in the economic field. **4**

பொருளாதாரத்துறையில் தொழிற் புரட்சியால் ஏற்பட்ட உடன்பாடான தாக்கம் பற்றி விவரிக்க

12 Describe the various methods used by the England in controlling trade with India in 1600 A.D. **1×4=4**

1600 ஆம் ஆண்டில் இந்தியாவுடனான வணிகத்தைக் கட்டுப்படுத்துவதில் ஆங்கிலேயர்கள் பயன்படுத்திய பல்வேறு முறைகளை விவரிக்க.

13 Explain the role of Raja Ram Mohan Roy as a socio-religious reformer. **4**

ஒரு சமூக - சமய சீர்திருத்தவாதி என்கிற முறையில் இராஜாராம் மோகன் ராயின் பங்கினை விளக்குக.

14 Why did some peasants - revolts take place on account of the British policies ? Explain. **4**

பிரிட்டிஷாரின் கொள்கைகள் காரணமாக சில விவசாயிகலகங்கள் ஏன் ஏற்பட்டன? விளக்குக.

15 Explain the locational significance of India. **1×4=4**

இந்தியாவின் அமைவிட முக்கியத்துவம், அல்லது சிறப்பு பற்றி விளக்குக.

16 Distinguish between 'intensive farming' and 'extensive farming'. **1×4=4**

ஆழ்ந்த முறையில் பயிரிடுதலையும் அகன்ற முறையில் பயிரிடு தலையும் வேறுபடுத்துக.

17 "The distribution of rainfall in India is highly uneven". Support the statement with examples. **1×4=4**

"இந்தியாவில் மழைப்பரவல் சீராக இருப்பதில்லை" இக்கூற்றுக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகள் தருக.

18 Mention any four Directive Principles that promote social and economic equality. **1×4=4**

சமூக, பொருளாதார சமத்துவத்தை உயர்த்துகின்ற வழிகாட்டு நெறிகளில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

19 Mention the main sources of income of the Gram Panchayats. **1×4=4**

கிராம பஞ்சாயத்துகளின் முக்கியமான வருமான ஆதாரங்களைக் குறிப்பிடுக.

20 Explain the 'Executive' and 'Legislative' powers of the Governor. **2+2=4**

ஆளுநரின் 'நிருவாக' மற்றும் 'சட்டமியற்றும்' அதிகாரங்கள் பற்றி விளக்குக.

21 Explain the Original and Appellate jurisdiction of the Supreme Court. **2+2=4**

உச்ச நீதிமன்றத்தின் அசலான / உண்மையான நீதிவரம்பினைப் பற்றியும் மேல் விசாரணை நீதிவரம்பு பற்றியும் விளக்குக.

22 Explain the functions performed by political parties during elections. **4**

தேர்தல்களின் போது அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை விளக்குக.

23 How are 'Communalism' and 'Regionalism' challenges to National integration ? Explain with examples. **2+2=4**

வகுப்புவாதமும் வட்டாரவாதமும் எவ்வாறு நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு சவாலாக அமைகின்றன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**24** Describe the various demands that the early Congress leaders – the 'Moderates', placed before the British government in the form of petitions during its first twenty years. **5**

மிதவாதிகள் என அழைக்கப்பட்ட ஆரம்பகால காங்கிரசு தலைவர்கள் முதல் 20 ஆண்டுகளில் பிரிட்டிஷ் அரசின் முன் விண்ணபங்கள் வடிவில் வைத்த பலவகையான கோரிக்கைகளைப் பற்றி விளக்குக.

**25** Explain the physical and socio-economic factors that influence the distribution and density of population in India. **1×5=5**

மக்கள் தொகைப் பரவலையும் அடர்த்தியையும் பாதிக்கின்ற வெளிப்படையான காரணிகளையும், சமூக, பொருளாதார காரணிகளையும் விளக்குக.

**26** Explain the role of Public opinion in a democracy. **1×5=5**

ஜனநாயகத்தில் பொதுக்கருத்தினஅ பங்கினை விளக்குக.

**27** Explain any five indications that reveal disparities in India. **1×5=5**

இந்தியாவில் வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டும் காரணிகளில் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**28** In the given political outline map of India, locate and label the following with suitable symbols : **4×1=4**

(28.1) Karakoram mountain range

(28.2) Narmada river

(28.3) The leading Tea producing state

(28.4) Ranthambhore Wildlife Sanctuary.

கொடுக்கப்பட்டுள்ள இந்திய அரசியல் வரைபடத்தில் கீழ்க்காண்பவற்றைப் பொருத்தமான சின்னங்களுடன் அமைவிடங்களைக் குறித்துக் காட்டுக:

(28.1) காரகோரம் மலைத்தொடர், நர்மதை ஆறு


(28.2) தேயிலை உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலம்,

(28.3) இரான்தம்பூர் வனவிலங்குகள் சரணாலயம்

**29** Identify the four 'Bio-reserves' shown on the given political outline map of India as A, B, C and D and write their correct names in your answer book. **4×1=4**

கொடுக்கப்பட்டுள்ள இந்திய அரசியல் வரைபடத்தில் நான்கு உயிரினக்காடுகளை (Bio-reserves) அடையாளம் கண்டு, அவற்றை A, B, C, D எனக் குறிப்பிட்டு, அவற்றின் தற்காலப் பெயர்களையும் உங்களுடைய விடைப் புத்தகத்தில் குறிப்பிடவும்.

**Outline Map of India (Political)**



**Note:** The following questions are for the Visually Impaired Candidates Only in lieu of Q. No. 28 and 29. **4×2=8**

(29.1) Name any two parallel ranges of Himalayas.

(29.2) Name the two major westward flowing rivers of Peninsular India.

(29.3) Name any two major sugarcane producing states of India.

(29.4) Name the Terminal stations of the North-South Corridor.

**குறிப்பு:** வினா எண்கள் 28 க்கும் 29 க்கும் பதிலாகப் பின்வரும் வினாக்கள் கண்பார்வைக் குறைபாடுடையோருக்கு மட்டும் உரியனவாகும்.

(29.1) இமயமலையின் இணையான மலைத்தொடர்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

(29.2) தீபகற்ப இந்தியாவில் மேற்கு நோக்கிப் பாயும் இரண்டு பெரிய ஆறுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(29.3) வடக்கு-தெற்குப் பகுதியில் முக்கியமான இரயில்வே நிலையங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

Roll No. | | | | | | | | | | | | |

**Q. No. 28**

## Outline Map of India (Political)

